2

அநுபூதி

"என்ன சீனு சார், சுவாமி புறப்பாட்டுக்குக் கிளம்பியாச்சு. இங்க உக்காந்துக்கிட்டு என்ன செய்யறீங்க?"

"இதோ வரேன், நீங்க போங்க."

"என்ன, உடம்பு சுகமில்லையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. தலையெல்லாம் கொஞ்சம் பாரமா இருக்கு."

"இப்ப ஜாக்கிரதையா இருக்கணும் சார். குளிர் ஆரம்பமாகிற சமயத்திலேதான் ஜுரம், சளியெல்லாம் பிடிச்சுக்கும். ஸ்வெட்டரும் போட்டுக்காம வெட்டவெளியிலே உக்காந்திருக்கீங்க. முருக பக்தர்னா உடம்பு இரும்புன்னு நினைச்சுட்டீங்களா?"

-தன் ஹாஸ்யத்தைத் தானே ரசித்துக் கொண்டு சண்முகம் சிரித்தார்.

நேற்றைக்காயிருந்தால் சீனிவாசனும் புன்னகைத்திருப்பார். இன்றைக்கு அந்த வார்த்தைகள் சுரீரென்று புதிய பரிணாமங்களுடன் குத்தின; இனம் புரியாத ஆத்திரத்தைக் கிளப்பின.

'நான் அத்தனை முட்டாளில்லை சண்முகம்... அதோ, புறப் பாட்டுக்குக் கிளம்பிண்டிருக்கானே, அவனுடைய மனசுதான் இரும்பு' என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது.

ஜனக் கும்பல் இன்றைக்கு மிக அதிகமாக இருந்தது. கந்தசஷ்டி உற்சவ ஆரம்பம். எத்தனை தினுசு ஜனங்கள்! டில்லி தமிழர்களுடன் இடித்துப் பிடித்துக் கொண்டு நிற்கும் மலையாளிகளையும் வடக்கத்திக்காரர்களையும் பார்க்கும் போதெல்லாம் ஏற்படும் ஆச்சரியம் சீனிவாசனுக்கு அப்போதும் ஏற்பட்டது. 'முருகனிடம் இப்படி ஒரு பற்றுதல் எப்படி ஏற்பட்டது இவர்களுக்கு?'

''வெற்றிவேல் முருகனுக்கு...!''

''அரோஹரா!''

''ஆறுமுக வேலனுக்கு...!''

'அரோஹரா..!''

ஜுர வேகத்துடன் கூட்டத்திலிருந்து கோஷம் எழுந்தது. கன்னத்தில் அறைந்து கொண்டு, சிரத்திற்கு மேல் கைகளால் தாளம் போட்டுக் கொண்டு, கண்களில் நீர் மல்க....

இந்த மாதிரி ஒரு பைத்தியக்காரப் பிரமையில்தான் இத்தனை நாளும் இருந்தேன். அது பிரமைதான். சிந்தனையை மறக்கடிக்கும் பிரமை. இல்லாவிட்டால் இன்று அந்த அதிர்ச்சி நெஞ்சைத் தாக்கியதும் மனசு இப்படி ஸ்தம்பித்து நிற்காது....

''என்ன சீனு யோசனை? மூலஸ்தானத்துக்கு உற்சவமூர்த்தியை அழைச்சுண்டு போகணும். ஒரு கை கொடுக்கல்லியா?''

''இல்லை. நீங்கள்லாம் போங்கோ. உடம்பு சித்த சரியா யில்லே!''

''அப்ப சரி. இந்தக் குளிர் ஆரம்பிச்சாச்சுன்னா இதுதான் அவஸ்தை! சுவாமிக்குக்கூட வெந்நீரைப் போட்டுக் குளிப்பாட்டினா தேவலை.''

''ஏன், அவருக்கு என்ன உடம்பு?''

தன் குரலில் இருக்கும் சூடு அவருக்கே வியப்பைத் தந்தது. இந்த ஊமைக் கோபத்தினால் என்ன லாபம்?

உற்சாகமும் சுறுசுறுப்பும் கொப்பளிக்க, கூட்டம் உற்சவ மூர்த்தியுடன் படியேறி குன்றின்மேல் வீற்றிருந்த மூல விக்ரகர் ஸ்வாமிநாத சுவாமியை நோக்கிக் கிளம்பிற்று.

எதிலோ மிக மோசமாக ஏமாற்றப்பட்ட மாதிரி மனசு பரித வித்தது. 'என்னமாய் நீ என்னை ஏமாற்றலாம்?' என்ற கேள்வியை விடாமல் கேட்டது. 'உன்னையே நம்பிச் சரணடைந்ததற்கு இப்படிச் செய்தாயா?' என்று துக்கம் துருத்திக் கொண்டு கண்களில் நீர்கட்டி நின்றது.

'நீ வெறும் பிம்பம் என்று இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன். என் குறைக்ளை உன்னிடம் பைத்தியம் மாதிரி முறையிட்டதெல்லாம் அபத்தமான காரியம். பக்தனின் கண்ணீரைத் துடைப்பாய் என்பதெல்லாம் அபத்தம்...'

''என்ன சீனு, உடம்புக்கென்ன? என்னமோ மாதிரி இருக்கீங்க?''

சீனு சுயநினைவுக்கு வந்தார்.

முக்தானந்தம் நின்றிருந்தார்.

''ஒண்ணுமில்லே சார்.''

''பின்னே மேலே வாங்களேன்!''

''இல்லே, நீங்க போங்க. இன்னிக்கு மூட் சரியாயில்லே!''

முக்தானந்தம் சிரித்தார்.

''வேடிக்கைதான். அப்பத்தானே சுவாமியைப் பார்க்கணும்?''

''பாத்துப் பாத்து என்னத்தைக் கண்டோம் போங்க?''

-சொல்லும்போதே தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் தளும்பப் பார்த்தது.

முக்தானந்தம் ஒரு விநாடி அவரைக் கூர்ந்து பார்த்தார்.

''எதைக் காணணும்னு எதிர் பார்க்கிறீங்க?''

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் சீனு சற்று நேரம் பேசாமல் நின்றார்.

முக்தானந்தம் சிரித்துக் கொண்டே அவர் தோள்மேல் கையைப் போட்டார்.

''வாங்க, மேலே போவோம். உங்க பார்வைக்கு இன்னிக்கு என்ன படுதுன்னு பார்ப்போம்...!''

சீனு வேறு வழியில்லாமல் படியேறினார். ''மனசிலே பாரமிருந்தா சோர்வு ஏற்படும் சீனு சார். அந்தப் பாரத்தை இறக்கத் தானே இங்க வர்றோம்!''

''அது வெறும் ஸைக்கோதெரப்பி முக்தானந்தம். மறுபடியும் நாமதானே அதைச் சுமக்கணும்?''

''அதுக்குள்ளே ஒரு புதுத்தெம்பு வந்துடுதில்லே? பாரம் தூக்கறது சுளுவாவுது இல்லே?''

சீனு பதில் சொல்லாமல் ஏறினார்.

மூலவர் சந்நிதியில் நிற்க இடமில்லாமல் கூட்டம் இருந்தது. அந்தப் பிராகாரத்தையும் கர்ப்பக்கிருகத்தையும் விக்ரகத்தையும் பார்க்கப் பார்க்க மனசில் மறுபடி ஒரு ஜ்வாலை மூண்டது.

'இவ்வளவும் என்னுடைய விசேஷ முயற்சியால் உருவானவை. ஒரு கண்மூடித்தனமான வெறியில், பக்தி என்கிற உணர்வில் வீட்டைப் பற்றிய சிந்தனையெல்லாம் இரண்டாம்பட்ச மாக்கி, இந்தக் கோயிலை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோணத்தில் நின்று பார்த்து மெய்சிலிர்த்துப் போயிருக்கிறேன். எனக்கா இத்தனை பெரிய அடியைக் கொடுத்தாய்? எத்தனை கேவலமாய் நடத்திவிட்டாய், முதுகில் குத்திய மாதிரி?'

ஏன்? ஏன்?

'ஸாரி மிஸ்டர் சீனிவாசன்! நீங்க தைரியமாயிருக்கணும். இது மனுஷயத்தனத்துக்கு அப்பாற்பட்டது. நாள் கணக்கு அல்லது சில மாதங்கள்....'

'ஒரே பிள்ளை ஐயா! அதுவும் உன் பெயரைச் சொல்லி விரதமிருந்து உன் அருளால் பிறந்தவன் என்று நான் நம்பியவன். உன் பெயரை அவனுக்கு வெச்சவன். அவன் புத்தியும் சாதுர்யமும் உன் அருள் என்ற பிரமையில் இருந்தவன்....'

'ஸாரி மிஸ்டர் சீனிவாஸன். உங்கள் பிள்ளைக்கு லுகேமியா....குணப்படுத்த முடியாதது....!'

'ஒரே போடு! அசந்த சமயத்தில் கழுத்தில் அரிவாள் விழுந்த மாதிரி.. எனக்கு அது எப்படியிருக்கும் என்று நினைத்தாய்?'

'சில மாதங்கள் அல்லது சில நாட்கள்.'

'இதுவும் உன் அருளா?'

'ஏன்? நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்?'-துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. மார்பிலும் தலையிலும் அடித்துக் கொண்டு கதற வேண்டும் போலிருந்தது.

'பாரம் குறையுமா? சுமை குறையுமா? என்னை பலவீனப் படுத்திப் பார்ப்பதில் உனக்கு என்ன லாபம்?'

''வெற்றிவேல் முருகனுக்கு!''

''அரோஹரா!''

''ஆறுமுக வேலனுக்கு!''

''அரோஹரா!''

சத்தத்தைத் தாங்க முடியாதவராய் அவர் வெளிப் பிரா காரத்துக்கு வந்தார். 'அட, பித்துக்குளிகளா!' என்று அந்தக் கும்பலைப் பார்த்துத் தனக்குள் நகைக்கையில் கண்களில் நீர் நிறைந்தது. மனசில் இதுவரை அனுபவித்தறியாத அலுப்பும் கோபமும் பகபகவென்று கிளம்பியது. அவர் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு ஒரு ஒதுக்குப்புறமாக நின்றார். அங்கு நடேசன், அவர் கூடவே கோயில் திருப்பணிகளில் ஆரம்பத்திலிருந்து ஈடுபட்டவர். தனியாக ஓர் ஓரமாய் அமர்ந்திருந்தார். சீனுவைப் பார்த்து சிநேகிதமாய்ச் சிரித்தார்.

''வா, சீனு. நானே உன்னைப் பார்க்கணும்னு நினைச்சுண்டிருந் தேன்.''

சீனு லேசாகத் திடுக்கிட்டபடி அருகில் சென்றார்.

இவருக்கு விஷயம் தெரிந்திருக்குமோ?

''என்ன சமாசாரம்?''

''என்னவோ, ரெண்டுநாளா மனசு சஞ்சலப் பட்டுண்டிருந்தது....''

''என்ன விஷயம்?''

நடேசன் உடனே பதில் சொல்லாமல் ஆகாயத்தைப் பார்த்தார். தூரத்தில் தெரிந்த அடுக்குமாடிக் கட்டடங்களில் எதையோ தேடினார்.

சீனுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சதா சிரிக்கச் சிரிக்கப் பேசும் நடேசனுக்கு என்ன நேர்ந்து விட்டது?

''என்ன நடேசன்?''

நடேசன் மெள்ளத் திரும்பி உயிரில்லாமல் புன்னகைத்தார்.

''என் பிள்ளை கோபு என்னை வீட்டை விட்டு அனுப்பிச் சுட்டான். அதாவது துரத்திட்டான்.''

சீனு தூக்கிவாரிப் போட்டு நிமிர்ந்து பார்த்தார்.

விழிகள் பிதுங்க கேள்வி துருத்திக் கொண்டு வந்தது.

''என்னது? ஏன்?''

''என்னவோ போயேன். நா பாரமா போயிட்டேன் அவனுக்கு!''

சீனுவுக்கு மார்பு படபடத்தது.

''என்ன நடேசன், அக்கிரமமாயிருக்கு. முருகன் சந்நிதியே கதின்னு உட்கார்ந்திருக்கிற நீ, உன் பிள்ளைக்குப் பாரமாய் போயிட்டியா?''

''விடு! இதுக்கெல்லாம் பதட்டப்பட்டுண்டு காரணம் கேட்டுண்டிருந்தா ஒண்ணும் லாபமில்லே. பாசம் அறுந்து போச்சு. இனிமே ஒட்டும்னு தோணல்லே!''

அந்த வார்த்தைகளில் இருந்த நிதானத்தையும் பார்வையில் தெரிந்த சாந்தத்தையும் பார்க்கப் பார்க்க சீனுவுக்கு அடிவயிற்றைச் சுருட்டிக் கொண்டு ஒரு துக்கம் கிளம்பிற்று. 'அடப்பாவி!' என்று கதற வேண்டும் போலிருந்தது. எப்படி மனசு வந்தது அந்தக் கிராதகனுக்கு?

முப்பது வருஷங்களுக்கு முன் தோளில் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு தாயில்லாப் பிள்ளை கோபுவின் கையைப் பிடித்துக் கொண்டு சென்னையிலிருந்து டெல்லிக்கு வந்தவர் நடேசன்.

ஏதோ வேலை கிடைக்கப் போகிறது என்று நம்பி வந்து வேலை கிடைக்காமல் முன்பின் தெரியாத, பாஷை புரியாத ஊரில் நாயாய் அலைந்து, ஆலாய்ப் பறந்து, நாலு டியூஷன் பிடித்து, வைதீகம் பார்த்து, உடம்பைச் செருப்பாய்த் தைத்து இந்தக் கோபுவைப் படிக்க வைத்து... அவனை பேங்க் ஆஃபீஸராக உருவாக்கி....

'அடேய் கோபு...! இந்த மாதிரி ஒரு தகப்பனாரை விரட்ட உனக்கு எப்படியடா மனசு வந்தது?'

''நடேசன்! உன்னையா அந்தப் படுபாவிப்பயல் விரட்டினான்? உடம்பை ஓடாய் அவனுக்காகத் தேய்ச்சியே, எல்லாம் மறந்துட்டானா? நன்னாயிருப்பானா அவன்?''

நடேசன் அவசரமாக அவர் வாயைப் பொத்தினார்.

''வேண்டாம் சீனு. எதையும் சொல்லாதே. என் மனசிலே எந்தவிதமான கோபமும் இல்லே; வெறுப்புமில்லே. இரண்டு நாளா ரொம்ப தீவிரமா யோசனை பண்ணிண்டிருக்கேன். 'இனிமே நீங்க வேற இடம் பார்த்துண்டு போங்கோ'ன்னு அவன் சொன்னதும் எனக்கு ரொம்ப வருத்தமாத்தான் இருந்தது. ஆனா இந்த இரண்டு நாள் யோசனையிலே மெள்ள மெள்ளத் தெளிஞ்சுடுத்து மனசு. அகங்காரத்தினாலே அவன் உறவு வேண்டாம்னான். என் அகங்காரம் இறங்கினதனாலேயே இந்த உறவு அவசியமில்லேன்னு முடிவுக்கு வந்துட்டேன்!''

''நீ ரொம்ப கலக்கத்திலே இருக்கே நடேசன்!''

நடேசன் தீர்மானமாகத் தலையை ஆட்டினார்:

''இல்லவே இல்லே. இப்பத்தான் கலக்கமே இல்லே. இந்தத் தகப்பனார்-பிள்ளைங்கற உறவெல்லாம் எதேச்சையா நேர்ற நிகழ்ச்சி. இங்கிலீஷிலே என்ன சொல்வே.. இன்ஸிடென்டல்! அதை நாம என்னவோ ரொம்ப சத்தியமானது, நிரந்தரமானதுன்னு அஞ்ஞானப்படறோம், அதுதான் நம்ம கலக்கத்துக்குக் காரணம்!''

சீனுவுக்குத் தாங்கவில்லை. அதெப்படி இப்படி நினைப்பது சாத்தியம்? இந்த விரக்தி எத்தனை நாளுக்கு இருக்கும்? பச்சா தாபத்தில் மனசு கரைந்து போயிற்று. கண்களில் நீர் நிறைந்தது. மறுபடியும் ஒரு ஜ்வாலை அடிவயிற்றிலிருந்து புறப்பட்டது.

''இந்த முருகனுக்குக் கோயிலைக் கட்டி அவனைச் சுத்தி வந்ததெல்லாம் இதற்குத்தானா?''

நடேசன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார்:

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? நம்ம கர்மாவை நாம தொலைச்சுத்தானே ஆகணும்? முருகனை வலம் வந்ததாலே நமக்கு கிரேஸ் மார்க் கிடைக்கும்னு நினைச்சியா?''

சீனு எதுவும் சொல்லாமல் அமர்ந்திருந்தார். இப்பொழுது தன்னுடைய துக்கத்தை விட நடேசனுடைய துக்கம் அதிகம் என்று தோன்றிற்று. இருந்து கொண்டே வதைக்கும் பையனைவிட சொற்ப காலமே வாழ்ந்து சந்தோஷமளிக்கும் பையன் மேல்...

''ஒரு விஷயம் சீனு! இந்த உலகத்து உறவெல்லாம் சாச்வத மில்லே. சரீரம் சாச்வதமில்லாதபோது உறவு எப்படிச் சாச்வதமா இருக்க முடியும்? ஒரே ஒரு உறவுதான் சாச்வதம். அதைத் தேடித்தான் இங்க வரோம். நீ இதுக்கும் லஞ்சம் கொடுத்துச் சலுகையை எதிர் பார்த்தேன்னா இந்த உறவை உன் லெவலுக்குக் கீழே இழுக்கறேன்னு அர்த்தம். கொச்சைப்படுத்தறேன்னு அர்த்தம்....''

சட்டென்று மனசு குலுங்கிற்று. சடசடவென்று ஏதோ முறிந்து போகிற மாதிரி இருந்தது....

''பின்ளைப் பாசம் என்கிறதெல்லாம் கூட ஒரு சுயநலம்தான் சீனு. என்னுடைய ஏதோ ஒண்ணு என் பிள்ளைகிட்ட ஒட்டிண்டி ருக்குங்கற காரணத்தாலே எனக்கு அவன் மேலெ பிரமை. அதுக்குப் பிரியம், பாசம்னு சொல்லிக்கிறேன். அதுக்குக் கூலி எதிர் பார்க்கிறேன். வாஸ்தவத்திலே நம்ம பிம்பத்திலேயே நமக்கிருக்கற

பிரமை இது. எத்தனை பைத்தியக்காரத்தனம் பார்த்தியோ? இதே பாசமும் ஒட்டுதலும் ஊரார் வீட்டுப் பிள்ளை மேலே ஏற்படறதோ?''

சீனிவாசன் எழுந்தார்.

''நீ சொல்றது வாஸ்தவந்தான். ஆனா ரத்த சம்பந்தத்துக்குச் சக்தி அதிகம் தான் நடேசா... நீ அதுக்கு எந்த மாதிரி காரணம் சொன்னாலும் கலங்காம இருக்கிறது கஷ்டம்.''

''கஷ்டம்தான். நாம கேவலம் மனுஷ ஜன்மங்கள்தான். ஆனா சுமையைச் சுமையாய்ப் பார்க்காதவனும் இருக்கான், ரொம்ப பாரமா நினைக்கிறவனும் இருக்கான். அவனவன் சக்தியைப் பொறுத்தது அது...''

சீனு குன்றின் மேலிருக்கும் உள்பிராகாரத்துக்குப் பார்வையை ஓட்டினார். அங்கு முண்டியடித்துக் கொண்டு நிற்கும் கும்பலைப் பார்த்து நினைத்துக் கொண்டார்... 'அந்தச் சக்தியை எதிர் பார்த்துத் தான் நிற்கிறது இந்தக் கும்பல்... தனது ஆத்ம சக்தியை அதிகரித்துக் கொள்ளத்தான் நிற்கிறது...'

நடேசனின் தோளின் மேல் வாஞ்சையுடன் கையைப் போட்டபடி சொன்னார்:

''நா வரேன் நடேசன். முடிஞ்சபோது வீட்டுப் பக்கம் வா. சாவகாசமாப் பேசணும்.''

''சுப்பிரமணியன் சௌக்கியமா? அவன்தான் எப்பவும் க்ளாஸ்லே ஃபஸ்ட்டுன்னு கேள்விப்பட்டேன்! எப்படியிருக்கான்?''

''சௌக்கியந்தான் நடேசன். நா வரேன்.''-கண்களில் குபுக்கென்று கண்ணீர் நிறைந்து போனதை நடேசன் பார்க்குமுன் அவர் அவசரமாகப் படிகளில் இறங்க ஆரம்பித்தார்.

கீழ்ப்படியில் முக்தானந்தம் நின்றிருந்தார்.

''என்ன சீனு சார்? இன்னிக்குப் புதுசா ஏதாவது கண்ணுலே பட்டுதா?'' என்றார்.

''நிறையவே பட்டுது முக்தானந்தம்.''

''எனக்கும்தான் சித்தச் சொல்லுமேன்!''

''சொல்றேன்-சாவகாசமா-இன்னும் சில நாட்கள்லே, இல்லே, சில மாதங்கள்லே!''

மறுபடியும் வெட்கமில்லாமல் கண்ணில் திரண்ட நீரை மறைக்க, ''நா வரேன் முக்தானந்தம்'' என்றபடி அவசரமாக நடையைத் தொடர்ந்தார்.

ஆனந்த விகடன் 1979